செ.வெ.எண்:36/மே நாள்:18.05.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

## நான்கு சட்டமன்ற தொகுதிகளுக்கான தேர்தல் வாக்கு எண்ணும் பணிகளுக்குத் தேவையான முன்னேற்பாடுகள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டுள்ளது

## மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள நான்கு சட்டமன்ற தொகுதிகளுக்கான தேர்தல் வாக்கு எண்ணிக்கை நாளை (19.05.2016) இராமநாதபுரம் அண்ணா பல்கலைக்கழக அரசு பொறியியல் கல்லூரியில் நடைபெறவுள்ளது. வாக்கு எண்ணும் பணிகளுக்குத் தேவையான முன்னேற்பாடுகள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் அனைத்தும் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவருமான முனைவர்.ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் சட்டமன்ற பொதுத் தேர்தல் 2016-க்கான வாக்குப்பதிவு 16.05.2016 அன்று நடைபெற்றது. மாவட்டத்திலுள்ள நான்கு சட்டமன்ற தொகுதிகளிலும் வாக்குப்பதிவு முடிந்தவுடன் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் அனைத்தும் காவல்துறை பாதுகாப்புடன் இராமநாதபுரத்திலுள்ள அண்ணா பல்கலைக்கழக அரசு பொறியியல் கல்லூரி வளாகத்தில் வைக்கப்பட்டு வேட்பாளர்கள்/வேட்பாளர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் முத்திரையிடப்பட்டது.

இந்நிலையில், சட்டமன்ற பொதுத் தேர்தல் 2016-க்கான வாக்கு எண்ணிக்கை அண்ணா பல்கலைக்கழக அரசு பொறியியல் கல்லூரியில் நாளை நடைபெறுகிறது. வாக்கு எண்ணும் பணிகள் நாளை காலை 8 மணி அளவில் துவங்குகிறது. தேர்தல் வாக்கு எண்ணிக்கை பரமக்குடி சட்டமன்ற தொகுதிக்கு 22 சுற்றுகளும், திருவாடானை சட்டமன்ற தொகுதிக்கு 23 சுற்றுகளும், இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதிக்கு 23 சுற்றுகளும், முதுகுளத்தூர் சட்டமன்ற தொகுதிக்கு 26 சுற்றுகளும் நடைபெறும். தேர்தல் வாக்கு எண்ணிக்கைக்காக ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிக்கும் தலா 14 மேஜைகள் (Table) பயன்படுத்தப்படவுள்ளன. வாக்கு எண்ணும்போது ஒவ்வொரு மேஜையிலும் ஒரு வாக்கு எண்ணிக்கை மேற்பார்வையாளர், ஒரு வாக்கு எண்ணிக்கை உதவியாளர் மற்றும் ஒரு நுண்பார்வையாளர் இடம்பெறுவர். வாக்கு எண்ணும் பணிகளுக்காக மொத்தம் 416 அலுவலர்களும், 78 நுண்பார்வையாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வாக்கு எண்ணும் மையமான அண்ணா பல்கலைக்கழக அரசு பொறியியல் கல்லூரிக்கு இந்திய - திபெத் (Indo - Tibet) எல்லை பாதுகாப்புப் படையினர், தமிழ்நாடு ஆயுதப்படை காவலர்கள், மாவட்ட காவல்துறை அலுவலர்கள் உள்ளிட்ட மூன்றடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. பாதுகாப்புப் பணிகள் அனைத்தும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் தலைமையில் 2 கூடுதல் காவல்துறை கண்காணிப்பாளர்கள், 12 காவல்துறை துணைக் கண்காணிப்பாளர்கள், 20 காவல்துறை ஆய்வாளர்கள், 47 உதவி காவல்துறை ஆய்வாளர்கள் மொத்தம் 1200 காவல்துறை அலுவலர்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்படுகின்றனர். எனவே சட்டமன்ற பொதுத் தேர்தல் 2016 வாக்கு எண்ணும் பணிகளுக்காக முன்னேற்பாடு பணிகள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டுள்ளது என மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவருமான முனைவர்.ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**